Fuel Oil Factory.

*143 *Q.*—Thiru WILSON APPOLLOS (on behalf of Thiru Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to approach the Central Government for the establishment of a factory for the manufacture of fuel oil from coal ; and

(*b*) if so, the present stage thereof ?

எரி எண்ணை தயாரிக்கும் தொழிற்சாலை.

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நிலக்கரியிலிருந்து எரி எண்ணெயைத் தயாரிக்கும் ஆலையை நிறுவ, மத்திய அரசைக் கேட்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

Factory for production of Sodium Dichromate.

*144 *Q.*—Thiru WILSON APPOLLOS (on behalf of Thiru L. BALARAMAN): Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the amount invested by the Government on the Sodium Dichromate Factory in Ranipet, North Arcot District, towards the erection of machines and buildings ;

(*b*) the date on which the factory will commence production ; and

(*c*) the quantum of production per day?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1975 மார்ச் 10]

சோடியம் டைகிரோமேட் தயாரிக்கும் தொழிற்சாலை.

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு மதுவிலக்குத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டையில் உள்ள சோடியம் டைகிரோமேட் (Sodium Dichromate) எனும் இரசாயனப் பொருள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு இயந்திரம், கட்டிடம் முதலியவைகளை நிறுவ அரசு எவ்வளவு முதலீடு செய்தது?

(இ) இவ்வாலை எப்போது வேலை செய்யத் துவங்கும்?

(உ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு இரசாயனப் பொருள் உற்பத்தியாகும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) நிலம், கட்டிடம் ரூபாய 2.11 இலட்சம். இயந்திரங்கள் ரூபாய 2.357 இலட்சம்.

(இ) சோதனை ஓட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில இயந்திரக் கோளாறுகளை சரி செய்த பிறகே உற்பத்தியைத் துவக்க இயலும்.

(உ) தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 2 டன்.

Arulmigu Sankaramurthi Nainar Koil at Courtallam.

*145 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether the Government have received any representation requesting to being Arulmigu Sankaramurthi Nainar Koil at Courtallam Tirunelveli district, under the control of the Hindu Religious and Charitable Endowments (Administration) Deparment; and

(*b*) if so, the action taken thereon?

திருக்குற்றாலத்தில் உள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி நயினார் கோவில்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருக்குற்றாலத்தில் உள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி நயினார் கோயிலை அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?